1974 சனவரி 21]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) வழக்காடு செலவில் சேர்ந்துள்ள வழக்குரைஞர் கட்டணத்தை உயர்த்த வேண்டும் எனக் கேட்டு வழக்குரைஞர் சங்கங்களிடமிருந்து இத்துறைக்கு முறையீடுகள் எவையும் வரவில்லை. ஆனல் திண்டிவனம், செங்கற் பட்டு போன்ற வெளியூர் வழக்குரைஞர் சங்கங்கள் சிலவற்றிட மிருந்து இது குறித்து உயர்நீதி மன்றத்திற்கு வந்த முறையீடுகளை யொட்டி உயர்நீதி மன்றம் குழு ஒன்றை அமைத்து வழக்குரைஞர் கட்டண விதிகளை திருத்தியமைத்தது. அதற்கு ஒப்புதல் அளிக்கு மாறு 1970 ஆண்டில் அரசுக்கும் எழுதிக் கேட்டது. அவ்வாறு திருத்தியமைக்கப்பட்ட விதிகள் எல்லா நிலைகளிலும் தற்போ துள்ள கட்டண விதத்தை பொதுவாக உயர்த்தியுள்ளன.

(இ) சட்டத் துறையின் 3—1—1973 ஆம் நாளிட்ட 5 ஆம் எண் அரசு ஆணையில் அரசு 1973-ம் ஆண்டு மேற்கூறிய திருத்தியமைக்கப்பட்ட வழக்குரைஞர் கட்டண விதிகளுக்கு ஒத்திவைக்கப்படுகின்றன.

THIRU R. PONNAPPA NADAR: Sir, there is a feeling among the lawyers that the fee that has been fixed is too low in view of the mounting cost of litigation that is prevailing at present. So, is there any proposal to revise the advocate's fee?

THE HON. THIRU S. MADHAVAN: It is better all these things are decided by the High Court. That is why I told that the High Court has appointed a Committee. The Committee recommended a proposal. The Government had accepted the proposal. If any proposal comes from the High Court, we will accept it.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினு எண்கள் 52, 53 ஒத்திவைக்கப்படுகின்றன.

திருப்புவனம் கால்வாயின் குறுக்கே மேம்பாலம்.

* 54 வினு—**திரு. த. சோனையா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருப்புவனம் கால்வாயின் குறுக்கே மேம்பாலம் கட்டு வதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) கிராம ஊரக வளர்ச்சித் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தில், கி.மீ. 14/2 மதுரை மண்டபம் ரோடிலிருந்து பிரிந்து செல்லும் கறுகர் கடை சாலே மேம்பாடு செய்வதற்கான வேலே எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மேற்படி சாலேயின் குறுக்கே திருப்புவனம் வாய்க்காலில் குழாய் கண்ணுள்ள தரைப்பாலமும் கட்டப்படும்.

திரு. த. சோணையா : திருப்புவனம் கால்வாயில் கட்டப்படுகிற பாலம் தரைப் பாலமாக இருக்கும் காரணத்தால் திருப்புவனம் கண்மாய்க்குப் போகிற தண்ணீர் தடைப்படும் என்று கருதி அந்த ஊர்க்காரர்கள் கோர்ட்டுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலே ஏற்பட்டிருக்கிறது. அதை மேம்பாலமாகக் கட்டித்தர அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஒப்புதல் அளிக்கப் பட்டிருப்பதற்குத்தான் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் அதுபற்றிப் பரிசிலனே செய்வது என்ருல் காலதாமதம் ஏற்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பார்களாளுல் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியும்.

வடவாறு, வெட்டாறுகளின் குறுக்கே பாலம் அமைப்பு.

*55 விஞ—**திரு. துரை கோவிந்தராசன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில், பனவெளி, தென்பறம்பூர் கிராமங்களே இணைக்கும் வகையில் வடவாறு, வெட்டாறு தலேப்பில் பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலே மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லே.

(இ) இக்கேள்விக்கு இடமில்லே.